

கர்த்தர் உரைத்த வார்த்தை

# வாலிபர்களுக்காக..

## வாலிபர்களைக் குறித்துக் கர்த்தர் உரைத்த வார்த்தைகள்:

நாம் வாழும் இந்தக் கடைசிக்காலத்தில் வாலிபர்கள் நடுவில் ஏற்படப் போகும் சில தீமையான காரியங்களைக் கர்த்தர் நமக்கு முன்னறிவிப்பாக எச்சரித்துச் சொல்லி, அவைகளுக்காக நாம் ஜெபிப்பதின் மூலம் நம் குடும்பம், சபை, மற்றும் தேசத்திலுள்ள வாலிபர்களைப் பாதுகாத்துக் கொள்ள ஆலோசனை தந்திருக்கிறார். இந்தக் கைப்பிரதியில் கர்த்தர் வாலிபர்களைப் பற்றி வெளிப்படுத்திச் சொன்ன எச்சரிக்கையின் வார்த்தைகள் அடங்கியிருக்கிறது. கவனத்துடன் இதை வாசித்து பாரத்துடன் இதற்காக ஜெபியுங்கள்.

அன்புடன்,

**சகோ.வின்சென்ட் செல்வகுமார்**

இந்த தீர்க்கதரிசன வார்த்தைகள் 02.01.2019 அன்று பெங்களூரில் நடைபெற்ற புத்தாண்டு வாக்குத்தத்தக் கூட்டத்தில் கர்த்தர் வெளிப்படுத்திப் பேசியது.

## கர்த்தர் உரைத்த தீர்க்கதரிசன வார்த்தைகள்

விளையாட்டுக்கு விலை போகிற வாலிபர்கள் எழும்பப் போகிறார்கள். 24 மணி நேரமும் விளையாட்டுக்குப் பின்னால் அவர்கள் கண்சொருகிப் போனவர்களாக அலையப் போகிறார்கள். அது அவர்களுடைய மனங்களை ஆக்கிரமித்து அவர்களை போதையில் அகப்பட்டவர்களைப் போலக் கண் சொருகிப் போனவர்களாக மாற்றப் போகிறது.

இரவு, பகல் பாராமல் அதிலே அவர்கள் கவனம் செலுத்துவார்கள். இதனிமித்தமாக அநேகம் வாலிபர்கள் எதையும் சிந்திக்க முடியாதவர்களாக, மனநிலை பாதிப்படைந்தவர்களாக, ஏதோ ஒன்றை தீவிரமாகத் தொடர்கிறவர்களைப் போல, தங்கள் எதிர்காலத்தைக் குறித்துக் கவலையில்லாதவர்களாக, தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதவர்களாக திடீரென்று எதிர்பாராத ஆபத்தான காரியங்களைச் சமுதாயத்தில் செய்து விடுவார்கள். நீங்கள் கற்பனை பண்ணக் கூடாத தீமைகளையும், ஆபத்தான காரியங்களையும் சடுதியில் செய்து விடுவார்கள். கொலை வெறியர்களாயும், மூர்க்க வெறியர்களாயும், பிறருக்கு தீமை செய்து அதினால் இன்பம் அனுபவிக்கிறவர்களாயும் இவர்கள் மாறிப் போவார்கள். தாயைக் கொலை செய்கிறவனும், தகப்பனைத் தாக்குகிறவனும், தன் சகோதரிகளை மானபங்கப்படுத்துகிறவனும், மாம்ச வெறியனும், குழந்தைகளை கொலை செய்கிறவனும், அவர்களை அசுத்தப்படுத்துகிறவனும் இதன் வழியாக திரளாக எழும்புவார்கள். இப்படிப்பட்ட ஒரு கொடிய சாத்தானின் அலை விளையாட்டின் வழியாக தீவிரமாகக் கடந்து வருகிறது. அது வாலிபரையும், தன் வசப்படுகிற யாவரையும் பிடித்துக் கொள்ளப் போகிறது. பல தேசங்களையும் அது தன் பிடியினால் இறுக்கிக் கொள்ளும். இந்தியாவில் இது குறிப்பாக அநேகம் வாலிபர்களையும், வாலிபப் பெண்களையும் பிடித்துக் கொள்ளும். அவர்களுடைய மனநிலைகளை தீவிரமாக ஆளுமை செய்யும். அதின் பின்னாக ஓடி, அதின் வஞ்சகத்தினால் பிடிக்கப்படுகிற எவனும் தன் ஜீவனை இழந்து போகத்தக்கதாக அது கிரியை செய்யும். இதன் பிடியில் சிக்கிக் கொள்ளுகிற எவனும் தன் மனோராஜ்ஜியத்தில் சஞ்சரிக்கிறவனாயும், நிஜத்தில் செயலற்றவனாகவும் மாறி, தன் மனதிற்குள் குமைந்து குமைந்து திடீரென்று பொல்லாத காரியங்களில் தன்னிலை மறந்து ஈடுபட்டு விடுவார்கள். நீங்கள் நம்பவும் முடியாத கிரிமினல் காரியங்களில் இவர்கள் நுழைந்து அநேகரின் அழிவுக்கு காரணமாயிருப்பார்கள். இது தீவிரமாகப் பரவும் காலத்தில் இது அநேகம் தேசங்களில் கட்டுப்படுத்த முடியாத பிரச்சனையாக உருவெடுக்கும். தேசங்கள் நடுவில் இது பிரதான பேசுபொருளாக மாறும்.

### வாலிபர்களைக் குறிவைக்கும் பொல்லாத ஆவி

அன்றியும் கொஞ்ச நாட்களாக பலமற்றுப் போயிருந்த தூமாஷின் ஆவி மறுபடியும் கிரியை செய்யும்படியாகத் துளிர்க்கிறதைப் பார்க்கிறேன். இந்த ஆவியானது ஜனங்கள் நடுவிலும், தேசத்தின் நடுவிலும் குழப்பங்களைக் கொண்டு வரும். போலியான ஞானம் என்று அர்த்தங்கொள்ளும் ஞானத்தினால் நிறைந்த ஞானஸ்தர்களை எழுப்புகிறதும், அவர்களைக் கட்டுகிறதுமான இந்தப் பொல்லாத ஆவி, இனி வருகிற காலங்களில் குறிப்பாக வாலிபர்களைக் குறி வைத்துக் கிரியை செய்யும். வாலிபர்களை பாலியல் இச்சைகளினால் நிரப்பப்பண்ணி, தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாத வண்ணமாக அவர்களைக் குருட்டாட்டம் பிடிக்கப் பண்ணப் போகிறது. முறையற்ற பாலியல் கிரியைகளினாலும், இச்சைகளினாலும் வாலிபர்களின் மனங்களை நிரப்புகிறதினால் மாம்சத்தை வேட்டையாடுகிறவர்களும், மாம்சத்தை சிதைத்து கொலை செய்கிற கொலைகாரர்களும், விதவிதமான பாலியல் இச்சைகளை ஆவலும் செய்கிறவர்களும், அவைகளை உருவாக்குகிறவர்களும் வாலிபர்களிலும், வாலிப பிள்ளைகளிடத்திலும் திரளாக உருவாகப் போகிறார்கள். தேசத்தில் கொடுமையான பாவக் குற்றங்கள் பெருகும். இது வீடுகளையும், வீதிகளையும், பொது இடங்களையும், பள்ளிகளையும், ஜனத்திரள் நிறைந்த இடங்களிலும், வனாந்திரமான இடங்களிலும், வசிப்பிடங்களிலும், கழிப்பிடங்களிலும் கூட தன் கிரியையை நிறைவேற்றும். அநேகம் குடும்பங்கள் சிதறவும், தேசம் பதறவும் தக்கதாக கொடிய கிரியைகள் அரங்கேறும். பிள்ளைகளைக் கொல்லுகிற பெற்றோரும், பெற்றோரைக் கொல்லுகிற பிள்ளைகளும் கூட எழும்புவார்கள். இதன் தீவிரத்திற்கு எதிர்த்து நிற்கக் கூடாதபடிக்கு சமுதாயம் திகைக்கும். இது குறிப்பாக இந்திய தேசத்தின் மேலேயே தீவிரமாகக் கிரியை செய்யும்படியாக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது.

### ஜெபக் குறிப்புகள்

1. வாலிபர்களின் இருதயங்களைப் பிடித்துக் கொள்ளும்படியாக தீவிரமாய்ப் பரவி வரும் எல்லா இணையதள விளையாட்டுகளும் முடக்கப்படவும், தேசங்களில் இதற்கான சட்டங்கள் இயற்றப்பட்டு அவைகள் அகற்றப்படவும் ஜெபியுங்கள்.

2. கொடிய இணையதள விளையாட்டுகளால் மனம் வஞ்சிக்கப்பட்டு, பொல்லாத காரியங்களில் ஈடுபடும் கொடிய வாலிபர்களின் தலைமுறை எழும்பிவிடாதபடி மன்றாடி ஜெபியுங்கள்.

3. மனக்கண்கள் குருடாக்கப்பட்ட வாலிபர்களினால் சமுதாயத்தில் கொலைகள், பாலியல் வன்முறைகள், தற்கொலைகள் போன்ற தீமைகள் பரவாதபடிக்கு பாரத்துடன் ஜெபியுங்கள்.

4. வாலிபர்களுக்கு விரோதமாகக் கிரியை செய்யவும், இச்சைகளை தேசத்தில் திரளாகப் பெருகச் செய்யவும் புறப்பட்டிருக்கும் தூமாஷ் என்கிற ஆவியின் சகல கிரியைகளும் கட்டப்படவும் ஜெபியுங்கள்.

### தொடர்ந்து ஜெபிக்க விரும்புகிறீர்களா?

தொடர்ந்து இதுபோன்ற தீர்க்கதரிசனங்களுக்கு ஜெபிக்க விரும்புகிறீர்களா? அப்படியானால் கீழ்க்கண்ட எங்கள் தொடர்பு எண்களில் ஏதாவது ஒன்றிற்கு மிஸ்டு கால் கொடுங்கள். எங்கள் ஊழியர்கள் உங்களுடன் தொடர்பு கொண்டு தொடர்ச்சியாக நீங்கள் ஜெபத்திற்கான தீர்க்கதரிசனங்களை எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**prophetic propagators mission**

| MADURAI | CHENNAI | BANGALORE |
| --- | --- | --- |
| 9488987770 | 9600001844 | 8095772333 |

Email : propagators@vojmedia.com

0091/TAM/2019/002